# சிசு சவிய 2021

## 5ம் தர மாணவர்களுக்கான கைக்கோர்ப்பு

5

ஐந்தாம் தர மாணவர்களுக்காக நடாத்தப்படும் மாதிரி பரீட்சை
சப்பிரகமுவ மாகாணம்

# விடுமுறைக் கால விஷேட முன்னோடிப் பரீட்சை

**வினாத்தாள் II** **ஒரு மணித்தியாலம் 15 நிமிடம்**

**பெயர் :.......................................................................................................**

## சப்பிரகமுவ கல்வி திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவின் கையளிப்பு

பரீட்சார்த்திக்கான அறிவுறுத்தல்,

- உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை மேலே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.
- அது போன்று மூன்றாம் பக்கத்திலும் உங்களுடைய பரீட்சை சுட்டெண்ணை எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலே விடை எழுதுக.
- கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.
- விடை எழுத வேண்டிய வினாக்களின் விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

## விசேட அறிவித்தல்கள் (கவனத்திற்கு)

**பாடசாலை அதிபர்களுக்கானது..**

* இவ் வினாத்தாளினை அச்சிட்டு அல்லது பிரதி எடுத்து (2021-09-07) செப்டெம்பர் மாதம் 7ம் திகதிக்கு முன்பே தங்கள் பாடசாலையில் தரம் 5ல் கல்வி கற்கும் சகல மாணவர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவும்.
* வினாப்பத்திரம் தொடர்பாக சந்தேகங்கள், பிரச்சினைகள் இருப்பின், தங்களது கோட்டத்திற்குப் பொறுப்பான ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர், வலயத்தின் ஆரம்பக்கல்விப் பணிப்பாளர் அல்லது மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆரம்ப பிரிவிற்கு அழைத்து ஆலோசனை பெறவும்.
* புள்ளிகளை தொலைபேசி மூலம் பெற்று அறிக்கைப் படுத்த ஆவண செய்யுங்கள்.
* விடைகள் தொடர்பாக பெற்றோர்களுக்கு சந்தேகங்கள் இருப்பின் வகுப்பு பொறுப்பாசியரின் உதவியைப் பெற்றுக் கொடுக்கவும்.
* வேறு மாகாணம், வலயங்களைச் சேர்ந்த மாணவர்களாயினும் வினாப்பத்திரத்தை வழங்குங்கள்.
* இவ்வேலைத்திட்டம் தொடர்பான தங்களின் ஒத்துழைப்பிற்கும், அர்ப்பணிப்பிற்கும் வாழ்த்துக்கள்.

**அன்பான பெற்றோர்களே ! பிள்ளைகளே !**

* கொவிட் -19தொற்று நோயால் பாடசாலைக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளன..
* வீடுகளில் இருக்கும் தரம் 5 மாணவர்களுக்காக சிசு சவிய முன்னோடி பரீட்சை வினாத்தாள்களை வழங்குகின்றோம்.
* சகல பிள்ளைகளும் (2021-09-07)செப்டெம்பர் 07ம் திகதி இவ்வினாப்பத்திரத்திற்கு வீட்டில் இருந்தே விடையளிப்பீர்கள் என எதிர்பார்க்கிறோம்.
* நேர அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| பகுதி I | பகுதி II |
|---|---|
| 1 மணித்தியாலயம் | 1 மணி 15 நிமிடங்கள் |

* வீட்டில் தகுந்த இடத்தை தெரிவுசெய்து வினாத்தாள்களுக்கு விடையளிக்க சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கவும்.
* எவ்விதமான இடையூறுகள், அழுத்தங்கள் கொடுக்காது, சுயமாக வினாப்பத்திரத்திற்கு விடையளிக்க உதவுங்கள்.
* குறிப்பிட்ட தினத்தில் மேற்கொள்ள இயலாதுவிடின் வேறொரு நாளில் விடையளிக்க சந்தர்ப்பம் வழங்குக.
* மிகவும் மகிழ்ச்சியாகவும், விநோதமாகவும் விடைளிக்க ஆற்றல் கிடைக்க வேண்டும் எனப் பிராத்திக்கிறோம்.

சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஆரம்பப்பிரிவு



(மறு பக்கம் பார்க்க)

01). பின்வரும் பந்தியை நன்றாக வாசியுங்கள்.

நான் யார் தெரியுமா தோழர்களே! நான்தான் தேனீ! நான் உருவாக்கும் அற்புதமான மருந்துவக் குணமுள்ள பானம் தான் தேன். எங்கள் குடும்பம் இராணித் தேனீயின் கட்டளைப்படியே செயற்படும். எங்களுக்கு வேலைகள் பகிரப்பட்டுள்ளன. அதனால் எங்கள் குடும்பத்தைச் சிறந்த கூட்டுக் குடும்பத்திற்கு முன்னுதாரணமாகக் கூறுவார்கள். நாங்கள் அதிகாலையிலேயே எமது வேலைகளை ஆரம்பித்து விடுவோம். விடாமுயற்சியே எமது பலம். தொட்டனைத்தூறும் மணற்கேணி போல எமது முயற்சியைக் கைவிடுவதில்லை.

❖ **பந்தியைத் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை எழுதுக.**

i). இப்பந்தியில் குறிப்பிடப்படும் உயிரினம் எது? ...................................

ii). தேனீ உருவாக்கும் அதி விசேடமான மருந்து யாது? ...................................

iii). தேனீயின் குடும்பம் எதற்கு முன்னுதாரணமாகக் கூறப்படுகின்றது? .........................

iv). பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உவமானம் யாது? ..........................

v). தேனீக்களின் பலம் யாது? ...................................

vi). தோழிகளே! என்ற சொல்லின் ஆண்பாற் சொல்லைத் தெரிந்து எழுதுக. .......................

02). தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

சந்ததியினரின் / கருதி / ஈடுபடுவோம் / நன்மைக் / எதிர்கால / மரவளர்ப்பில்

..........................................................................................................................................

03). உயர்திணை இறந்தகால ஒருமை வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i). நாட்டினான். ii). மேய்ந்தது. iii). பேணுகிறோம்.

04). பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் சரி (√) எனவும், பிழையாயின் பிழை (x) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் அடையாளம் இடுக.

i). பட்டம் வானில் ஆடியாடிப் பறந்தது. ( )

ii). முற்றத்து மல்லிகை மணம் பரப்பியது. ( )

iii). குழந்தை மெல்ல மெல்லத் தவழ்வார்கள். ( )

iv). பாடசாலை விடுமுறையில் வீட்டுத்தோட்டம் செய்தேன். ( )

05). பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

அரசே என்னே உன்கொடை உன்னை எப்படிப் புகழ்வது

06). i). பின்வரும் பழமொழிபைப் பூர்த்தி செய்யப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

ஐந்தில் வளையாதது .................................. வளையுமா?

ii). பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

உடல் வலிமை அவசியம் - .........................................................................................

07). பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக்குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

i). சிறுவர் ( நாளிதழிலுள்ள / நாழிதலிலுள்ள) புதிர்களை வாசித்தேன்.

ii). தொல்பொருள்கள் அனைத்தும் (அகல்வாராய்ச்சியின் / அகழ்வாராய்ச்சியின்) போது கண்டெக்கப்பட்டவைகள்.

iii). யானை (பாரம் / பாறம்) தூக்குவதற்குத் தும்பிக்கை மிகவும் உதவியாக இருந்தது.

08). பின்வரும் ஆத்திச்சூடிக்குப் பொருத்தமான பொருளைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.
நேர்பட ஒழுகு - ..........................................................................................

09). கோடிடப்பட்ட எழுத்துக்களின் உயிர்க்குறிகளின் பெயர்களைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
i). போத்தல் - ...........................
ii). கருணை - ............................

10). கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச் சொல்லைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவன் - ........................................


11). i). கீழே தரப்பட்டுள்ள பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள உவமானத்தைத் தெரிந்து அதன் கீழ்க்கோடிடுக.

சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா - பின்னர்
செம்பொற் குடம் போலே தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராயம்மா - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா

ii). பெண்பால் சொல்லை எழுதுக.
பண்டிதன் - ..............................

12). தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

i).  ................................

ii).  ................................

13). தரப்பட்டுள்ள ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
i). Rabbit - …………………  ii). Waterfall - …………………..

14). கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
i). I am …………………. (eat / eating) a mango.
ii). This ………………… (is / are) my pen.

15). i). கீழே தரப்பட்டுள்ள சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.
யெஹலிய - ..........................
ii). பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.
எனக்கு ஒரு தம்பி இருக்கிறார். - ..........................................................................

❖ **தரப்பட்டுள்ள வெற்றிடங்களில் விடைகளை எழுதுக.**


16). i). நாற்பதாயிரத்து ஐந்து எனும் எண்ணை இலக்கத்தில் எழுதுக. ........................
ii). 6 2 3 6 4 கட்டமிடப்பட்டுள்ள இலக்கத்தின் இடப்பெறுமானத்தை எழுதுக. ......................

17). தரப்பட்டுள்ள எண்களை இறங்குவரிசையில் எழுதுக.
4978, 4789, 4879, 4897 - ..........................................................................

18). கட்டத்தில் தரப்பட்டுள்ள எல்லா எண்களையும் கொண்டு பொது வித்தியாசம் 6 ஆக வரக்கூடிய எண்கோலமொன்றைக் கட்டியெழுப்புக.


100 94
88 82
106

82 , ......... , .......... , ......... , ..........

19). 

தரப்பட்டுள்ள உருவில்,
i). நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாக எழுதுக. .................
ii). நிழற்றப்படாத பகுதியை தசம எண்ணாக எழுதுக. ...............


20). i). தரப்பட்டுள்ள உருவில் ¾ பங்கை நிறந்தீட்டுக.



ii). 84 மாங்காய்களின் அரைப் பங்கில் (½) உள்ள மாங்காய்களின் எண்ணிக்கை யாது? .........

21). 878 புத்தகங்கள் 5 சமனான பொதிகளில் இடப்பட்டது.
i). ஒரு பொதியிலுள்ள புத்தகங்களின் எண்ணிக்கை யாது? ........................................
ii). மீதியாக இருக்கும் புத்தகங்களின் எண்ணிக்கை யாது? .........................................


22). பேருந்து ஒன்று கொழும்பிலிருந்து முற்பகல் 10.45க்குப் புறப்பட்டு பிற்பகல் 5.35ற்கு பொலனறுவையை அடைந்தது.
i). பேருந்து பொலனறுவையை அடைந்த நேரத்தை 24 மணித்தியாலக் கடிகார நேரத்தில் எழுதுக. .............................
ii). இப்பயணத்திற்காக செலவிப்பட்ட நேரம் எவ்வளவு? ........................

23). 

i). இத் திண்மத்தின் பெயர் யாது? .............................
ii). இத்திண்மப் பொருளிலுள்ள விளிம்புகள் எத்தனை? ........................
iii). இத்திண்மப் பொருளின் முகங்களின் எண்ணிக்கை யாது? ...............

24). தரப்பட்டுள்ள உரோம எண்குறிக்கு முன்னரும், பின்னரும் வரும் உரோம எண்குறியை எழுதுக. .............. , VIII , ...........

25). சில நகரங்களுக்கிடையே உள்ள தூரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.




i). நீர்கொழும்பிலிருந்து புத்தளம் வரையிலான தூரம் எவ்வளவு? .........................
ii). கொழும்பிலிருந்து சிலாபம் வரை சென்று, மீண்டும் கொழும்பிற்கு வருவதற்கு செல்ல வேண்டிய தூரம் எவ்வளவு? ..............................

26). | அண்ணாவின் நிறை 56kg 250g / தம்பியின் நிறை 32kg 750g |

i). அண்ணாவினதும், தம்பியினதும் மொத்த நிறை யாது? ..........................

ii). தம்பியை விட அண்ணாவின் நிறை எவ்வளவு அதிகம் ? ........................

27). கீழ்வரும் விலைப்பட்டியலை நிரப்புக.

i).


| பொருள் | வாங்கிய அளவு | 1kg இன் விலை | | செலுத்த வேண்டிய பணம் | |
|---|---|---|---|---|---|
| | | ரூபாய் | சதம் | ரூபாய் | சதம் |
| சீனி | 250g | 220 | 00 | (i). ............ | ........ |
| கிழங்கு | (ii). ................ | 280 | 00 | 140 | 00 |
| பருப்பு | 500g | (iii). ......... | ....... | 175 | 00 |
| மொத்தப் பணம் | | | | (iv). ............ | ......... |

ii). இப் பொருள்களை வாங்கிய ஒருவர் 1000 ரூபாவைக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு? .............................

28). ஒரு போத்தலில் 350ml எண்ணெய் உள்ளது. ஒரு லீற்றர் பூரணமாவதற்கு மேலும் எத்தனை மில்லிலீற்றர் எண்ணெய் தேவைப்படும்? .............................


29). பின்வரும் உருக்களில் வரையக்கூடிய சமச்சீரச்சுக்களின் எண்ணிக்கையை எழுதுக.

i).



..........................

ii).



..........................

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.**

30). “ நான் எனது குடும்பத்திற்கும், வீட்டிற்கும் நற்பண்புள்ள ஒரு நல்ல பிள்ளையாவேன்.” இந்த எண்ணம் மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாடில் எந்தப் படிமுறைக்கு உரியது?

i). பிரார்த்தனை ii). திடசித்தம் (மனவுறுதி ) iii). மலர்வு (உதிப்பு)

31). தினமும் நீர் அருந்துவதால் கிடைக்கும் அனுகூலமானது,

i). சிறுநீர் கழித்தல் இலகுவாதல்.

ii). சிறுநீரகப்பை பாதுகாக்கப்படுதல்.

iii). சருமம் வெளிர்தன்மையாதல்.

32). “ தொன்புள்ளே வெதராளை” என அழைக்கப்படுபவர்.

i). மொனரவில கெப்பட்டிப் பொல திசாவ

ii). வீரபுர அப்பு

iii). கொங்காலே கொட பண்டா

33). இலங்கையின் அரச இலட்சினையில் நிறை குடத்தினால் உணர்த்தப்படுவது.
i). சௌபாக்கியம் ii). தன்னிறைவும் செழிப்பும் iii). நிலைத்திருத்தல்

34). இலங்கையின் தேசிய மலர் மற்றும் தேசிய பிராணி முறையே,
i). நீலோற்பலம், மர அணில்
ii). அல்லி, மரஅணில்
iii). நீலோற்பலம், காட்டுக்கோழி

35). அனைத்தும் உண்ணி எனப்படுவது,
i). விலங்குகளை மாத்திரம் உணவாக உட்கொள்ளும் பிராணிகள்
ii). தாவரங்களை மாத்திரம் உணவாக உட்கொள்ளும் பிராணிகள்
iii). தாவரம் மற்றும் விலங்குணவு இரண்டினையும் உணவாக உட்கொள்ளும் பிராணிகள்

36). இப்பரிசோதனையின் மூலம் விளங்கக்கூடியது,



i). காந்தத்தினால் கவரப்படும் தன்மை.
ii). காந்தங்களின் அசைவுத் தன்மை.
iii). காந்தத்தின் ஈர்ப்பு மற்றும் அசையும் தன்மை.

37). கீழே தரப்பட்டுள்ள உருவங்கள் ஊசித்துளைக் கமரா மூலம் பாரக்கும் போது புலப்படும் விதம்,



i).



ii).



iii).




38). வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கையில் இடையிடையே சாமந்திப் பூக்கன்றுகளை வளர்ப்பதற்கான நோக்கம்,
i). வீட்டுத் தோட்டத்தை அலங்கரிப்பதற்காக
ii). பயிர்களை சேதப்படுத்தும் பிராணிகளை துரத்துவதற்காக
iii). வாசனைக்காவும் அழகிற்காகவும்

39). பின்வருவனவற்றில் உலகப் பாரம்பரிய வரலாற்று முக்கியத்துவம் உள்ள இடமாக அறிவிக்கப்பட்டது,
i). சிங்கராஜ வனம்
ii). யால சரணாலயம்
iii). பேரதெனிய தாவரவியல் பூங்கா

40). நீர்ச்சக்கரத்தின் சுழற்சி வேகத்தை அதிகரிக்க செய்ய வேண்டியது,
i). நீரோட்டத்தின் வேகத்தை அதிகரித்தல்.
ii). நீரோட்டத்தின் வேகத்தை குறைத்தல்.
iii). நீர்ச்சக்கரத்தின் இதழ்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

41). கீழே தரப்பட்டுள்ள உருவின் பெயர் யாது?



i). காற்றுவேகமானி
ii). காற்றுத் திசைகாட்டி
iii). காற்றுத்தட்டை

42). குடிப்பதற்கான பானமொன்றை தயாரித்துக் கொள்வதற்குரிய தொகுதியாவது,
i). வெரலிக்காய், கெக்கரி, நெல்லிக்காய்
ii). வில்வம், பொன்னாவரசு, நன்னாரி
iii). தோடம்பழம், முடக் கொத்தான், சாத்தாவாரி

43). நீரை அதிகளவு கடலுக்குள் சேர்க்கும் நதி, அது கடலுடன் கலக்கும் மாகாணம் முறையே,
i). ஜின் கங்கை - தென் மாகாணம்
ii). மகாவலி கங்கை - மத்திய மாகாணம்
iii). களுகங்கை - மேல்மாகாணம்

44). இவ்வுபகரணங்களைப் பயன்படுத்துபவர்கள் முறையே,




i). கொத்தன் - தச்சன் ii). கொல்லன் - விவசாயி iii). விவசாயி - தச்சன்

45). பயிரிடுதலில் பயன்படுத்தப்படும் 3R திட்டம் எனப்படுவது,
i). பயன்பாட்டைக் குறைத்தல், மீள் உபயோகித்தல், மீள்சுழற்சி
ii). அகற்றுதல், கட்டுப்படுத்தல், மீள்சுழற்சி
iii). எரித்தல், கொள்கலனிடல், மீள்சுழற்சி


46). இலங்கையின் முதலாவது குளம், அதனைக் கட்டுவித்த மன்னன் முறையே,
i). பசவக் குளம் - பண்டுகாபயன் மன்னன்
ii). அபயவாவி - துட்டகைமுனு மன்னன்
iii). மின்னேரியா - மகாசேன மன்னன்

47). பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பறவைகளை, பிராணிகளை விரட்டுவதற்கு பயன்படுத்தப்படும் உபாயமாவது,
i). குளவிச் சக்கரம் ii). நீர்ச்சக்கரம் iii). காற்றுக்கிலுக்கி

48). தற்காலிகமாக பனிக்கட்டிகளை (ஐஸ்கட்டி) பயன்படுத்தும் சந்தர்ப்பமொன்றாவது,
i). இலை/ கீரை வகைகளின் புத்துணர்ச்சியை பாதுகாப்பதற்கு
ii). மீன் பழுதடையாமல் பாதுகாப்பதற்கு
iii). உலர் உணவுகள் பழுதடையாமல் பாதுகாப்பதற்கு

49). காந்தம் கவரக்கூடியதொன்று,
i). செப்புக்கம்பி ii). பித்தளைக்கம்பி iii). இரும்புக்கம்பி

50). மின்காந்தம் ஒன்றில் காந்த சக்தியை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டியது,





i). உலர் மின்கலங்களின் எண்ணிக்கைகளை அதிகரித்தல்.
ii). சுருள் கம்பியின் சுற்றுகளின் அளவை அதிகரித்தல்.
iii). சுருள் கம்பி சுற்றுக்களின் அளவைக் குறைத்தல்.

51). பின்வருவனவற்றுள் கிராமிய நடன வகைகளுள் அடங்குபவை,
i). குச்சுப்புடி, பரதம் ii). ஒயிலாட்டம், பரதம் iii). கும்மி , கோலாட்டம்

52). உடம்பில் ஏற்படுகின்ற காயங்கள் இலகுவில் குணமடையாமைக்குக் காரணமாவது,
i). விற்றமின் A குறைபாடாகும்.
ii). விற்றமின் C குறைபாடாகும்.
iii). விற்றமின் D குறைபாடாகும்.

53). இவ்வெற்றுப் பாத்திரத்திற்குள் நீரை நிரப்பியவுடன் குறிப்பிடப்பட்டுள்ள துளைகள் வழியே அதிக தூரத்திற்கு நீர் பாயும் துளை எது?




i). A துளை ii). B துளை iii). C துளை

54). கட்புல செவிப்புலனூடாக தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய உபகரணம்,
i). வானொலி ii). தொலைக்காட்சி iii). ஒலிபெருக்கி

55). கல்சியம் அடங்கிய உணவுத் தொகுதியாவது,
i). மீன் , எள்ளு , முட்டை
ii). பலா , ஈரப்பலா , வேர்க்கடலை
iii). வாழைப்பழம் , மாம்மபழம் , பசளி

56). இலங்கைக்கே உரித்தான முலையூட்டிகள் அடங்கிய தொகுதியாவது,
i). அழுங்கு , கருங்குரங்கு , மரநாய்
ii). வௌவால் , மரநாய் , நீர்ப்பாம்பு
iii). கருங்குரங்கு , மூஞ்சூறு, தேரை

57). அசுத்தமான நீரைப் பருகுவதால் ஏற்படக்கூடிய நோய்,
i). கல்லீரல் வீக்கம் ii). மஞ்சட்காமாலை iii).டெங்கு

58). கொழும்பு தொடக்கம் அவிசாவளை வரையிலான புகையிரதப் போக்குவரத்துப் பாதையாவது,
i). உடரட்ட புகையிரதப்பாதை
ii). களனி வழிப் புகையிரதப்பாதை
iii). கரையோரப் புகையிரதப்பாதை

59). நாற்று மேடையிலிருந்து கன்றுகளைப் பெற்றுக்கொள்ளும் பயிர்கள் அடங்கிய தொகுதியானது,
i). கத்தரி , கறி மிளகாய் ii). வற்றாளை, பசளி iii). வெண்டி, போஞ்சி

60). " நான் ஒரு சிட்டுக் குருவியாவேன்." என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. ( ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்புகளும்,எழுத்துக் கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

i). ..............................................................................................................................
..............................................................................................................................
ii). ..............................................................................................................................
..............................................................................................................................
iii). ..............................................................................................................................
..............................................................................................................................